**செய்தி வெளியீடு எண்:769** **நாள்: 13.11.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (13.11.2017), சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பு தொடக்க விழா மற்றும் கையேடு வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை**

*******

தமிழ் மக்களின் இதயங்களில்
என்றென்றும் நீக்கமற நிறைந்திருக்கும்
இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களை வணங்கி, இந்த இனிய விழாவில்
கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விழாவில் சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே !

தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
**திரு.கே.ஏ. செங்கோட்டையன்** அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய
மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்
**திரு. கே.பி.அன்பழகன்** அவர்களே !

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !
வருகை தந்துள்ள நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்களே !

வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர்
**முனைவர் கிரிஜா வைத்தியநாதன்** அவர்களே !

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகத்தின்
தலைவர் **திருமதி. பா.வளர்மதி** அவர்களே !

நன்றியுரை ஆற்றவுள்ள
பள்ளிக் கல்வித் துறையின் அரசு முதன்மை செயலாளர்
**திரு. பிரதீப் யாதவ்** அவர்களே !

மற்றும் வருகை தந்துள்ள
பள்ளிக் கல்வித்துறையின்
பல அலகுகளின் இயக்குநர்களே

விழாவிற்கு வருகை புரிந்துள்ள
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
கல்வித்துறை அதிகாரிகளே,
ஆசிரியப் பெருமக்களே!
பெற்றோர்களே!

நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்க உள்ள
மாணவச் செல்வங்களே !
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"மாணவ மாணவியருக்கு
சிறப்பான கல்வி அளிப்பதாலும்,
மக்களின் உடல் நலம்
பேணி பாதுகாக்கப்படுவதாலும்
மனித வளம் மேம்பாடு அடையும்.
மனித வளம் மேம்பட்டால், அந்த மாநிலத்தில்
வளர்ச்சி அதிகமாக இருக்கும்"**

என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்கள்,
அதனை நடைமுறைப்படுத்தும் வகையில்,
பள்ளிக் கல்வித் துறைக்கு
வரலாறு காணாத அளவிற்கு
நிதி ஒதுக்கீடு செய்து, பல்வேறு வசதிகளை
மாணாக்கர்களுக்கு செய்து கொடுத்துள்ளார்கள்.

குறிப்பாக,

- விலையில்லா புத்தகங்கள், புத்தகப் பை, சீருடை, காலணிகள், எழுதுபொருட்கள் உள்ளிட்ட 14 வகையான நலத்திட்டப் பொருட்கள் மாணாக்கர்களுக்கு விலையின்றி வழங்கப்படுகின்றன.

- ❖ மாணாக்கர்கள் பள்ளிக்குச் செல்ல வசதியாக மிதி வண்டிகளும், கற்றலை எளிதாக்கி இணையம் மூலம் கல்வி பயில வசதியாக மடிக் கணினிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில்
செயல்படும் இந்த அரசும் இத்திட்டங்களை தொடர்ந்து
செயல்படுத்தி வருகிறது. மேலும்,

- ❖ மதிப்பெண் அடிப்படையிலான தரப்பட்டியல் முறை முழுவதுமாக கைவிடப்பட்டிருக்கிறது.

- ❖ அரசுப் பொதுத் தேர்வு எழுதிய மாணாக்கர்கள் தங்களின் தேர்வு முடிவுகள் அறிய அங்குமிங்கும் அலைவதை தவிர்க்கும் வகையில், குறுஞ்செய்தி மூலம் தேர்வு முடிவுகளை அனுப்பும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

- ❖ ஆண்டின் தொடக்கத்திலேயே பொதுத் தேர்வுக்கான கால அட்டவணை அறிவிக்கும் முறை அமல்படுத்தப்பட்டது.

- ❖ 11ஆம் வகுப்பிற்கும் பொதுத் தேர்வு முறை கொண்டுவரப்பட்டது.

- ❖ மேலும், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் ஒளிவு மறைவின்றி இவ்வாண்டு 2,373 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன.

- ❖ 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான பாடத் திட்டங்களை மாற்றியமைக்கும் பணிக்கென ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**“பல்வேறு துறைகளைச் சார்ந்த**
**உலகத் தரம் வாய்ந்த நிறுவனங்களாலும்,**
**மிகச் சிறந்த மனித வளத்தினாலும்,**
**புதுமைகளின் முக்கிய மையமாகவும்,**
**இந்தியாவின் அறிவின் தலைநகராகவும்**
**தமிழ்நாடு அறியப்படும்”** என்று

“**தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை – 2023”–** கையேட்டில்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
குறிப்பிட்டுள்ளதை மெய்ப்பிக்கும் வண்ணமாக,
இன்றைய தினம்,
மாணவர்களின் அறிவுத் திறனை

மேலும் மெருகூட்டி, அடுத்த கட்டத்திற்கு
முன்னெடுத்துச் செல்லும் விதத்தில்
இப்பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து
அதற்கான நூல்களை வெளியிடுவதில்
மிகவும் பெருமிதம் கொள்கிறேன்.

தகுதி நுழைவு போட்டித் தேர்வுகளை மாணவர்கள்
எவ்வித தயக்கமும், தளர்வும் இல்லாமல்
உறுதியான எண்ணத்தோடு எதிர்கொள்ளும் வகையில்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு
எடுத்த முடிவின்படி

**தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையும்,**
**ஸ்பீடு அறக்கட்டளையும் இணைந்து**
**மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க**
**புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு,**
**அது இன்று செயல் வடிவம் பெறுகிறது.**

இத்திட்டத்தின் மூலம்
அரசு மற்றும் அரசு உதவி பெறும்
பள்ளிகளை சேர்ந்த  மாணாக்கர்கள் பயன் பெறுவர்.

இதுவரை இப்பயிற்சிக்காக
இணையதளம் வாயிலாக
73 ஆயிரம் மாணவர்கள்
தங்களின் பெயர்களை பதிவு செய்துள்ளனர்
என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் இத்திட்டமானது**
**இவ்வாண்டு 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு**
**அறிமுகப்படுத்தப்படுகிறது.**

இப்பயிற்சி மையத்தினை,
ஒன்றியத்திற்கு ஒரு மையம் என்ற வீதத்தில்
தமிழ்நாட்டில் மொத்தமாக 412 மையங்களில்
நடத்த திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள்
மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.

இன்றைய தினத்தில் முதல் கட்டமாக

100 மையங்களில் இப்பயிற்சி தொடங்கப்படுகிறது.
மிக விரைவில் மீதமுள்ள 312 மையங்களும்
பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மாணவர்களிடமிருந்து எவ்வித
கட்டணத்தையும் பெறாமல்
12ஆம் வகுப்புக்கு பின் தொழில்சார்
பட்டப் படிப்புகளில் சேர
விருப்பம் உள்ள மாணவர்களுக்கு
**முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.**

மேலும் தமிழ் மற்றும் ஆங்கில வழியில்
பயிலும் மாணவர்கள்
பாடப் பொருளை எளிதாக
புரிந்து கொள்ளும் வகையில்
அவர்களின் பயிற்று மொழியிலேயே
மிகச் சிறந்த பாட வல்லுநர்களைக் கொண்டு
இப்பாடங்கள் நடத்தப்படும்.

**இதற்கான பாடப் பகுதிகள் மாணவர்களுக்கு**
**30 பயிற்சி கட்டகங்கள், அதாவது**
**30 புத்தகங்களாக வழங்கப்படும்.**

**பள்ளிகளில் பெறும் கல்விச் செயல்பாடுகளில்**
**எவ்விதத் தேக்கமும் அடையா வண்ணம்,**
**மாணவர்களுக்கு இப்பயிற்சி வகுப்புகள்**
**காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை**
**பள்ளி விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்**
**கிழமைகளிலும், பொதுத் தேர்வு முடிவடைந்த பிறகு**
**தினந்தோறும் இதே நேரத்தில்**
**நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.**

இப்புத்தகத்தில் இயற்பியல், வேதியியல், தாவரவியல்,
விலங்கியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில்
கொள்குறி வகை (Objective type)
வினாக்களும் மற்றும் அதன்
பாடப் பொருட்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள்

அனைத்திந்திய அளவிலான போட்டித் தேர்வுகளில்
வெற்றி பெற முடியுமா ? என்ற கேள்வி
நிறையவே எழுந்து கொண்டிருக்கின்றன.

நான் ஒன்றை மட்டும் உறுதியாக சொல்லுவேன்.
தற்பொழுது உள்ள நம் மாநில பாடத் திட்டம்
இந்தியாவில் உள்ள எந்த ஒரு பாடத் திட்டத்திற்கும்
சளைத்தது அல்ல. அத்தகைய போட்டித் தேர்வுகளை
எதிர்கொள்ளும் வகையில்
நம் மாணவர்களுக்கு சரியான முறையில்
பயிற்சி அளிப்பதே தற்போதைய தேவையாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் வழிவந்த
அம்மாவின் அரசு அதற்கான அடித்தளத்தை
மாணவர்களுக்கு அமைத்துக் கொடுக்கிறது.
முயற்சியும், பயிற்சியும் முறையாக இருந்தால்
முன்னேறுவது உறுதி என்பதால்தான்
இன்றைய தினம் முறையான பயிற்சியை
மாணவர்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியை
நாம் முன்னெடுத்து இருக்கிறோம்.

மிகச் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு
இப்பயிற்சி கட்டணமின்றி வழங்கப்பட உள்ளதால்,
போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள வேறு எந்தப்
பயிற்சியும் எடுத்துக் கொள்ள தேவையும் இல்லை;

அதற்கென வேறு எந்த செலவினமும்
செய்ய வேண்டிய அவசியமும் இல்லை.
ஆண்டு பொதுத் தேர்வுக்கும்,
மாணவர்கள் கடினமாக நினைத்துக் கொண்டிருக்கும்
போட்டி தேர்வுகளுக்கும் அப்படி என்னதான்
வேறுபாடு என எண்ணிப் பார்த்த பொழுது,
எனக்கு ஒரு சிறிய கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரில் அனைத்து கலைகளையும்
கற்றுத் தேர்ந்த குரு ஒருவர் வாழ்ந்து வந்தார்.
அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட மூன்று மாணவர்கள்,
அக்குருவிடம் சீடர்களாக சேர வருகிறார்கள்.
குருவினை வணங்கி, தங்கள் விருப்பத்தினை

அவரிடம் தெரிவிக்கின்றனர்.

பொறுமையாக அவர்கள் கூறுவதை கேட்ட குரு,
அவர்களிடம், நாளை வாருங்கள் பார்க்கலாம்
என்று கூறி அவர்களை அனுப்பி வைக்கிறார்.

பின், அவர் தன் மனைவியிடம்,
நாளை அம்மாணவர்கள் வரும்போது,
**“நேற்று இரவு குரு உறங்கி கொண்டிருந்த போது
அவரின் காதில் ஒணான் ஒன்று
புகுந்து கடித்ததனால், குரு இறந்துவிட்டார்”,**
என்று தெரிவிக்குமாறு கூறுகிறார்.

அடுத்த நாள், அவர்களில் முதலாவதாக
வந்த மாணவனிடம் குருவின் மனைவி,
குரு சொன்னதை அப்படியே சொல்கிறார்.

அதைக் கேட்ட அம்மாணவன்,
**“ஓ! அப்படியா, அவரின் ஜாதகப்படி
இம்மாதத்தில் அவருக்கு ஒரு கண்டம் இருந்தது.
அதனால்தான் அவர் இறந்து இருப்பார்”,** என்று
தன்னைத்தானே தேற்றிக் கொண்டு
திரும்பிச் சென்று விடுகிறான்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த
இரண்டாம் மாணவனிடமும்
குருவின் மனைவி அதே செய்தியை கூறுகிறார்.
இரண்டாம் மாணவரும்,
**“ஓ! குரு இறந்துவிட்டாரா, அவரிடம்
கல்வி கற்க ஆவலுடன் இருந்தேன்.
சரி, வேறு ஒரு குருவினைத் தேடி
அவரிடம் கல்வி கற்றுக் கொள்கிறேன்”,**
என்று கூறி திரும்பிச் சென்று விடுகிறார்.

மூன்றாம் மாணவனிடமும், அதே செய்தியை
குருவின் மனைவி சொன்ன போது,
அம்மாணவன் சற்று யோசித்துவிட்டு,

**“மன்னிக்கவும், தாங்கள் பொய்**
**சொல்வதாக  நினைக்கிறேன்.**
**குரு இறப்பதற்கான வாய்ப்பில்லை”,**
என்று கூறுகிறான்.

மறைவிலிருந்து இதனைக் கேட்டுக் கொண்டிருந்த குரு,
**“ஆஹா,  நீயே சரியான மாணவன் ! உன்னை**
**நான் என் சீடனாக ஏற்றுக் கொள்கிறேன்”,** என்றார்.

குருவின் மனைவி ஆச்சரியத்துடன்,
அம்மாணவனைப் பார்த்து,
**“குரு இறக்கவில்லை என்பதை நீ எவ்வாறு அறிந்தாய் ?”**
எனக் கேட்கிறார்.

அதற்கு அந்த மாணவன்,
**“தாயே, தங்கள் கணவர் இறந்ததாக தாங்கள்**
**கூறிய போது  உங்கள் முகத்தில்**
**எந்தவிதமான துக்கத்தின் சாயலையும்**
**நான் பார்க்கவில்லை.**

**மேலும் ஒரு மனிதனின் காதில்**
**ஓணான் நுழைவதற்கு வாய்ப்பில்லை.**
**அப்படியே நுழைந்து கடித்தாலும் அதனால் உயிருக்கு**
**எவ்வித ஆபத்தும் வராது என்பதாலேயே,**
**குரு இறக்கவில்லை என்று நான்,**
**உறுதியாகக் கூறினேன்”,** என்றான்.

மாணவச் செல்வங்களே,
இக்கதையில் வரும் முதல் மாணவன்
தன் மதியை நம்பாமல், விதியை நம்பி
சென்று விடுகிறான்.

இரண்டாம் மாணவன்,
தான் கேட்ட செய்தியின்
உண்மைத் தன்மையை அறியாமல்,
குருவின் மனைவி சொன்னதே உண்மை
என்று எண்ணி,  குரு இறந்து விட்டார்,
இனி என்ன செய்வது ? என்ற கேள்விக்கு
இறந்த மனிதரிடம் சீடராக சேர முடியாது.

ஆகவே வேறு குருவை தேடிக் கொள்வோம் என்ற
யதார்த்த சிந்தனையுடன் சென்று விடுகிறார்.

மூன்றாம் மாணவரிடம், அதே கேள்வி
கேட்கப்பட்டபோது உடனே அம்மாணவன்,
அச்செய்தியில் உள்ள
உண்மைத் தன்மையை அறிய,

**ஏன் ? எதற்கு ? எங்கே ?**
**எப்படி ? எப்பொழுது ? யாரால் ?**
என்ற கேள்விகளின் துணை கொண்டு பகுத்தாய்ந்து,

**குரு இறக்கவில்லை, இறக்க வாய்ப்பில்லை**
**என்ற உறுதியான நிலைபாட்டினை எடுக்கிறார்.**

இத்தகைய சிந்தனையே
போட்டித் தேர்வுகளுக்கான கேள்விகளை
எதிர்கொள்ள தேவையானதாகும்.

ஆகவே மாணவர்களாகிய நீங்கள்
எந்த நேரத்திலும் ஏன் ? எதற்கு ? எப்படி ?
எங்கே ? எப்பொழுது ? யாரால் ? என்ற கேள்விகளை
உங்களுக்கு துணையாக அழைத்துச் செல்லுங்கள்.

உங்களை சறுக்கி விழாமல்
தாங்கிப் பிடிக்கும் தூண்களாக
அவை செயல்படும் என்பதை
அறிந்து கொள்ளுங்கள்.

**இலக்கினை இறுதி செய்.**
**மனதினில் உறுதி கொள்.**
**விரும்பிய இலக்கினை நோக்கிய உன் பயணம்**
**இனிதானதாகும்.**

**உன் இலக்கை நோக்கி பறந்து செல்,**
**பறக்க முடியவில்லை என்றால் ஓடு,**
**ஓட முடியாவிட்டால் நடந்து செல்,**
**நடக்கவும் முடியாவிட்டால் தவழ்ந்து செல்.**

**இலக்கினை நோக்கிய பயணம்**
**எத்தகையது என்பது முக்கியமல்ல.**

**நீ, உன் இலக்கினை நோக்கி,**
**இடையூறுகளை தகர்த்து**
**எப்படி முன்னேறிக் கொண்டிருக்கிறாய்**
**என்பதே முக்கியம்.**

அரசும், அதன் அங்கமாகிய ஆசிரியர்களும்
உங்களுக்கு நல்ல பாதையை மட்டுமே காட்ட முடியும்.
ஆனால் நீங்கள்தான் அந்தப் பாதையில்
எங்ஙனம், எவ்வளவு துாரம் செல்ல முடியுமென முடிவு செய்து முன்னேற உங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆகவே தான் முயலுக்கும் ஆமைக்குமான போட்டியில்
முயலும் வெல்லலாம், ஆமையும் வெல்லலாம்.
ஆனால் ஒருபோதும் **முயலாமை வெல்லாது** என்பதை
நினைவில் கொள்ளுங்கள்.

ஒரு செயலை தொடங்கும் போதே,
என்னால் முடியாது என நினைத்து தொடங்காதீர்கள்.
என்னால் முடியாவிட்டால்
இவ்வுலுகில் வேறு யாரால் முடியும் என்ற எண்ணத்தில்
செயலைத் தொடங்குங்கள். வெற்றி நிச்சயம்.

‘‘**மாற்றத்திற்கான தொடக்கமே**
**முன்னேற்றத்திற்கான அடையாளம்**’’ என்பார்கள்.

ஆழ உழாத நிலமும்,
ஆழ்ந்து படிக்காத மனமும் ஆக்கம் பெறுவதில்லை.
ஆகவே எதையும் ஆழ்ந்து படிக்க கற்றுக் கொள்ளுங்கள்.
அவ்வாறான ஆழ்ந்த கற்றலில்
புரியாததை புரிந்து கொள்ளுங்கள்.

புரிந்ததை பகிர்ந்து கொள்ளுங்கள்.
முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமில்லை.
ஆகவேதான் முயற்சியை பற்றி கூறும் போது
தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

**“அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்”**
–என்று கூறுகிறார்.

அதாவது எந்த ஒரு செயலையும்
செய்ய ஆரம்பிக்கும் போது,
இதை நம்மால் செய்ய இயலாது என்று
மனத்தளர்ச்சி அடைந்து சோர்வு கொள்ளல் ஆகாது.
என்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற
மன வைராக்கியத்தோடு செயல்படுங்கள்.

**“ மூச்சு விடுபவன் – மனிதன்**
**மூச்சை அடக்குபவன் – ஞானி,**
**மூச்சே போகும் என்றாலும் முயற்சியை**
**கைவிடாதவன் தான் – மாமனிதன்”**
அத்தகைய மாமனிதனே உலகை வெல்லப் பிறந்தவன்.
**முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்**
என்ற கூற்றிற்கிணங்க,

உங்களின் முழு ஆற்றலையும்
வெளிக்கொணர்ந்து,

தமிழ்நாடு அரசால் அளிக்கப்படும்
இந்தப் பயிற்சியின் துணை கொண்டு,

எதிர்வரும் போட்டித் தேர்வுகளில்
வெற்றி பெற்று, நீங்களும் உயர்ந்து,
நம் தமிழ் சமுதாயத்தையும் உயர்த்திட வேண்டுமாய்
அன்போடு கேட்டுக் கொண்டு
உங்களை எல்லாம் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**நன்றி! வணக்கம்.**

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**